# சாகித்திய அகாதெமி புத்தகக் கண்காட்சி தொடக்கம்

**சென்னை, நவ.14:** சென்னை தேனாம்பேட்டை குணா வளாகத்தில் சாகித்திய அகாதெமியின் சார்பில் நடத்தப்படும் புத்தகக் கண்காட்சி திங்கள்கிழமை தொடங்கியது.

நாட்டின் முதல்பிரதமர் ஜவாஹர்லால் நேரு பிறந்தநாளை முன்னிட்டு,தேசிய புத்தக வார விழா நவ.20–ஆம் தேதி வரை கடைப்பிடிக்கப்படுகிறது.

இந்தக் கண்காட்சியை தொடக்கி வைத்து தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் ஔவை அருள் பேசியதாவது:

சாகித்திய அகாதெமியை 1954–இல் முன்னாள் பிரதமர் ஜவாஹர்லால் நேரு சர்வப்பள்ளி ராதாகிருஷ்ணனை அழைத்துத் தொடக்கிவைத்தார்.

தற்போது முதல்வர் மு.க.ஸ்டாலின், சிறந்த எழுத்தாளர்களுக்கு கனவு இல்லம் திட்டத்தின் மூலம் வீடுகள் வழங்க நடவடிக்கை எடுத்துள்ளார்.

இதில் சாகித்திய அகாதெமி விருது பெற்ற 13 பேருக்கு தமிழக அரசு வீடு வழங்கியுள்ளது. சாகித்திய அகாதெமி விருது பெற்ற மு.வரதராசனாரின் தமிழ் இலக்கிய வரலாறு 34–ஆவது பதிப்பு தற்போது வெளியிடப்பட்டுள்ளது.பல இடங்களில் சாகித்திய அகாதெமியின் நூல்களைப் பரப்ப வேண்டும் என்றார் அவர்.

இப்புத்தகக்கண்காட்சி தினமும் காலை 9.30 முதல் மாலை 6 மணி வரை நடைபெறுகிறது. இதில் வாங்கப்படும் புத்தகங்களுக்கு விலையில் 20 முதல் 75 சதவீதம் வரை தள்ளுபடி செய்யப்படும்.

நிகழ்ச்சியில் சந்தியா பதிப்பக நிறுவனர் சந்தியா நடராஜன், சாகித்திய அகாதெமி விருதாளர் தேவி நாச்சியப்பன், அகாதெமியின் முன்னாள் பொதுக்குழு உறுப்பினர் ராம குருநாதன், முனைவர் மெய்ஞானி பிரபாகரபாபு, அகாதெமியின் பதிப்பக உதவியாளர் சி.ஸ்ரீனிவாசன் உள்ளிட்ட இலக்கிய ஆர்வலர்கள் கலந்து கொண்டனர்.



தேனாம்பேட்டை அண்ணாசாலையில் உள்ள சாகித்திய அகாதெமி அலுவலகத்தில் புத்தகக் காட்சியை திங்கள்கிழமை தொடக்கி வைத்த தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் ந.ஔவைஅருள். உடன் இடமிருந்து கவிஞர் மெய்யொளி பிரபாகரன், சென்னை சாகித்திய அகாதெமி அலுவலகப் பொறுப்பாளர் சந்திரசேகர ராஜு, பதிப்பு உதவியாளர் சி.ஸ்ரீனிவாசன் உள்ளிட்டோர்.